# குளித்தலை நகராட்சி

29.10.2018.ஆம் தேதி திங்கட்க்கிழமை மாலை 04.30மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01.

குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ந.க.எண்.38162/பி3/2014–3, நாள்–22.01.2015.ல் அனுமதி அளிக்கப்பட்டு, 01.08.2015.ல் ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. இவ் ஒப்பந்தப் பணிக்காலம் 31.07.2018 முடிவடைந்துள்ளது. 01.08.2018 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் 52 நபர்கள் துப்புரவு பணிசெய்ய மன்ற தீர்மானம் எண்.64, நாள்–28.03.2018.ல் அனுமதிக்கப்பட்டதன்பேரில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பு இவ்வலுவலக ந.க.எண்.1242/2018/எச்1–1, நாள்–11.06.2018 மூலம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் வழியாக அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி செயற்குறிப்பை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள், பரிந்துரை செய்து ந.க.எண்.2392/2018/அ4, நாள்–13.06.2018.ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் 25.10.2018.ஆம் தேதிய குறுஞ்செய்திக்கிணங்கவும், அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்–30.04.1997.ன்படி, இந்நகராட்சிக்கான குறியீட்டின்படி (Norms) 114 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுகிறது. தற்போது பணியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 39, ஒப்பந்த அடிப்படையில் தனியார்மூலம் துப்புரவு பணி செய்யும் 52 நபர்கள், ஆக கூடுதல் 91 துப்புரவு பணியாளர்கள் ஆகும். மீதம் தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் 23 ஆகும். தற்போது குறியீட்டின்படி தேவைப்படும் 23 துப்புரவு பணி செய்யும் நபர்களை தனியார்மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ளவும், அவர்களுக்கான தினக்கூலி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலைப்பட்டியலின்படி வழங்கவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற தக்க செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பொதுமக்களின் அத்தியாவசிய பணியான பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகராட்சிக்கு அரசாணை எண்.101.ன்படி தேவைப்படும் துப்புரவு பணியாளர் பணியிடங்கள் 114.ல், ஏற்கனவே உள்ள நிரந்தர பணியாளர்கள் 39.ம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உள்ள பணியாளர்கள் 52.ம், ஆக கூடுதல் 91 போக மீதமுள்ள 23 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார்மூலம் பணி மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலைப்பட்டியல்படி தினக்கூலி வழங்கவும், அதற்காக கோரும் செயற்குறிப்பினை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிபெற அனுப்ப அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 02.

குளித்தலை நகராட்சி நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய மின்மோட்டாரின் எலக்ட்ரானிக் ஸ்டார்ட்டர் சப்ளை செய்தல் மற்றும் பொருத்துதல் பணிக்கு ரூ.0.37 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.132, நாள்–18.07.2018.ல் அனுமதி பெற்று, 11.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய மின் மோட்டாரின் எலக்ட்ரானிக் ஸ்டார்ட்டர் சப்ளை செய்தல் மற்றும் பொருத்துதல் பணி. | 1). திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை. | 0.27 % குறைவு |
| | | 2). திரு.ஆர்.என்.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 0.01 % அதிகம் |

அலுவலக குறிப்பு–

1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.27% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எம்.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2298/2018/இ1)

**பொருள்– 03.** குளித்தலை நகராட்சிப் பகுதியில் குடிநீர் விநியோகத்தற்கு தேவையான ஹைப்போ குளோரைடு திரவம் (5-6%) சப்ளை செய்தல் பணிக்கு, ரூ.6.10 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.171, நாள்–31.08.2018.ல் அனுமதி பெற்று, 11.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குடிநீர் விநியோகத்திற்கான ஹைப்போ குளோரைடு திரவம் (5-6%) சப்ளை செய்தல் | 1). M/s.ஸ்ரீபாலாஜி அன்ட் கம்பெனி, தளவாய்பட்டி, சேலம். | 0.00 % அதிகம் |
| | | 2). M/s.ராஜகணபதி கெமிக்கல்ஸ், சித்தனூர், சேலம். | 0.39 % அதிகம் |

**அலுவலக குறிப்பு–** 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.00% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.ஸ்ரீபாலாஜி அன்ட் கம்பெனி, ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2714/2018/இ1)

**பொருள்– 04.** குளித்தலை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான 88A டோனர்கள் சப்ளைசெய்தல் மற்றும் ஆண்டிவைரஸ் இணையதள பாதுகாப்பு நகராட்சி கணினிகளில் அமைத்து தருதல் பணிக்கு, ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.173, நாள்–31.08.2018.ல் அனுமதி பெற்று, 11.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | அலுவலக பயன்பாட்டிற்கு 88A டோனர்கள் சப்ளை செய்தல் மற்றும் ஆண்டிவைரஸ் இணையதள பாதுகாப்பு நகராட்சி கணினிகளில் அமைத்து தருதல் | 1). M/s.கம்ப்யூட்டர் பார்க், கரூர். | 1.18 % குறைவு |
| | | 2). M/s.யூனிக்மைக்ரோ கம்ப்யூட்டர் (பி)லிட்., வேலாயுதம்பாளையம், கரூர். | 3.19 % அதிகம் |

**அலுவலக குறிப்பு–** 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 1,18% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.கம்ப்யூட்டர் பார்க் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2252/2018/இ1)

**பொருள்– 05.** குளித்தலை நகராட்சிப் பகுதியில் வண்டிப்பேட்டைத்தெரு, வைசியாள்தெரு, பிள்ளைத்தோப்புதெரு, வையாபுரிநகர், ஒட்டர்தெரு மற்றும் மலையப்பநகர் பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்து, மினிபவர் பம்ப் பொருத்தி, குடிநீர் வழங்குதல் பணிக்கு, ரூ.8.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள, 14.09.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, 11.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | வண்டிப்பேட்டைத்தெரு, வைசியாள்தெரு, பிள்ளைத்தோப்புதெரு, வையாபுரிநகர், ஒட்டர்தெரு மற்றும் மலையப்பநகர் பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்து, மினிபவர் பம்ப் பொருத்தி, குடிநீர் வழங்குதல். | 1). M.செந்தில்குமார், குளித்தலை. | 0.05 % குறைவு |
| | | 2). R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 0.26 % அதிகம் |

**அலுவலக குறிப்பு–** 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிப் பகுதியில் பள்ளிவாசல்தெருவில் வடிகாலை உயர்த்தி R.C.C.மூடுகல் பொருத்துதல் பணிக்கு, ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள, 14.09.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, 11.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி பகுதியில் பள்ளிவாசல்தெருவில் வடிகாலை உயர்த்தி R.C.C.மூடுகல் பொருத்துதல் பணி. | 1). M.செந்தில்குமார், குளித்தலை. | 0.16 % குறைவு |
| | | 2). R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 0.08 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தேவதானம், நமசிவாயநகர், வைகநல்லூர் அக்ரஹாரம், பெருமாள்கோவில்தெரு, வடக்கு முத்துராஜாதெரு ஆகியவற்றில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மினிபவர் பம்ப் பொருத்தி, குடிநீர் வழங்குதல் பணிக்கு, ரூ.6.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள, 14.09.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, 11.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | தேவதானம், நமசிவாயநகர், வைகநல்லூர் அக்ரஹாரம், பெருமாள்கோவில்தெரு, வடக்கு முத்துராஜாதெரு ஆகியவற்றில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மினிபவர் பம்ப் பொருத்தி, குடிநீர் வழங்குதல் | 1). M.செந்தில்குமார், குளித்தலை. | 0.05 % குறைவு |
| | | 2). R.N.வெங்கடாஜலபதி, குளித்தலை. | 0.31 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார், ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி அலுவலக மின்தேவைகள் அதிகம் உள்ளதால், புதிய மும்முனை மின் இணைப்பு பெறவேண்டி உள்ளது. அதற்குரிய செலவினம் ரூ.8659/– கட்டணத்தை தமிழ்நாடு மின்சார வாரியம், குளித்தலைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி, பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2964/2018/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு செய்து சமுதாய விநியோகம் மேற்கொள்வதற்கான அமைப்பு ஏற்படுத்தி 10 ஆண்டுகள் பராமரிப்பதற்கான பணிக்கான 22.10.2018 ஒப்பந்தப்புள்ளி நாள் குறித்த விளம்பரம் 04.10.2018.ல் அக்கார்ட் ஏஜென்சிஸ் விளம்பர நிறுவனம்மூலம் வெளியிடப்பட்டது. மேற்படி விளம்பர கட்டண பட்டியல் தொகை ரூ.70,088/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3114/2018/இ1)

..4..

பொருள்– 10. இந்நகராட்சியால், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படவேண்டிய ஆண்டு பங்களிப்புத் தொகை 2016–2017.ஆம் ஆண்டிற்கு ரூ.20,000/–ம், 2017–2018.ஆம் ஆண்டிற்கு ரூ.20,000/–ம், ஆக மொத்தம் ரூ.40,000/– (ரூபாய் நாற்பது ஆயிரம் மட்டும்) செலுத்த, இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.359/2017/அ2, நாள்–26.09.2018.ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் இயக்குநரகத்திற்கு 2016–2017 மற்றும் 2017–2018 ஆகிய இரு நிதி ஆண்டுகளுக்கும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.20,000/– வீதம் ரூ.40,000/–ஐ, ஆண்டு நிர்வாக பங்களிப்பு தொகையை செலுத்துவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.105/2017/பி1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி பொறியியல் பிரிவு அலுவலக உபயோகத்திற்கு 16–Kg தரத்தில் 6 அடி உயர இரும்பு பீரோ சப்ளை செய்தல் பணிக்கு, நாள்–03.09.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 06.09.2018 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 16–Kg தரத்தில் 6 அடி உயர இரும்பு பீரோ சப்ளை செய்தல் | ஸ்ரீசக்தி டிங்கரிங் & வெல்டிங் ஒர்க்ஸ், திருச்சி–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.10500/– |
| | | ஸ்ரீவெக்காளியம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மார்க்கெட்தெரு, மாரியம்மன்கோவில் அருகில், குளித்தலை. | ரூ.11800/– |
| | | R.L.S.இஞ்சினியரிங் ஒர்க்ஸ், முசிறி மெயின்ரோடு, சுங்ககேட், குளித்தலை. | ரூ.11500/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீசக்தி டிங்கரிங் & வெல்டிங் ஒர்க்ஸ் நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2843/2018/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி பெரியார்நகர் மூன்றாவது குறுக்குத்தெருவில் வடிகால் இல்லாததால், சாலையில் கழிவுநீர் செல்கிறது. பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பாதிக்கும் நிலை உள்ளதால், புதியதாக வடிகால் அமைக்க ரூ.4.00 லட்சம் உத்தேச செலவினத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தில் மேற்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3280/2018/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சி பெரியார்நகர் இரண்டாவதுதெரு மெயின்சாலையில் கழிவுநீர் சாலையில் செல்வதால், வடிகால் அமைப்பது அவசியமாக உள்ளது. பெரியார்நகர் இரண்டாவதுதெரு மெயின்ரோட்டில் மழைநீர் வடிகால் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3279/2018/இ1)

*******

## <u>குளித்தலை நகராட்சி</u>

29.10.2018.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 213 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 214 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 3 | 3 | 215 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 216 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 217 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 218 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 219 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 220 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 221 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 222 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 11 | 11 | 223 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 224 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 13 | 13 | 225 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.